மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 234/2025

பெயர் : சக்தி (PW1)

க/பெ : கருப்பசாமி

வயது :

கிராமம் :

தாலுகா :

Calling :

(Accused Pothinarayanan is produced from Judicial Custody. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st day of October 2025.

**முதல் விசாரணை**

1)நான் புதியம்புத்தூரில் வசித்து வருகிறேன்.நான் புதியம்புத்தூரில் டீ கடை வைத்துள்ளேன்.சாட்சி மகேந்திரனை தெரியும்.அவர் எனது மகன்.சாட்சி சுதந்திரகனியை தெரியும் அவர் என் உடன்பிறந்த தங்கை.ஆஜர் எதிரியை தெரியும்.அவர் என் தங்கையின் கணவர்.

2)21.08.2025 ஆம் தேதி காலை 8 மணியளவில் நானும் என் மகன், என் தங்கை ஆகியோர் என் வீட்டில் இருக்கும்போது ஆஜர் எதிரி வந்து என் தங்கையை வீட்டிற்கு அழைத்தார் என்னை பார்த்து தேவிடியா , சிருக்கி என்று அசிங்கமாக பேசி என்னிடம் தவறாக நடந்து கொள்வேன் என்று பேசினார்.என்னிடம் தகராறு செய்தார்.என்னை கொன்று விடுவதாக மிரட்டி விட்டு கத்தரிக்கோல் அருகில் இருந்த சாக்குபையில் குத்திவிட்டு சென்று விட்டார்.அவர் அவ்வாறு என்னை அசிங்கமாக பேசியதால் எனக்கு மிகவும் அவமானமாகவும் மிகுந்த மன உளைச்சலாகவும் இருந்தது.அதன்பிறது புதியம்புத்தூர் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன்.
என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையததுதான் (**மேற்படி புகார்மனு அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) என்னிடம் காட்டப்படும் கத்திரிக்கோல் தான் அன்று ஆஜர்தே எதிரி என்னை காட்டி மிரட்டிய கத்திரிக்கோல் **(என்னிடம் காட்டப்படும கத்தரிக்கோல் அ.பொ.சா.ஆவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் வீட்டின் அருகில் ஆனந்தராஜ் மற்றும் ராமு,ரவி வீடுகள் உள்ளது என்றால் வீடுகள் உள்ளது அங்கு குடியிருப்பவர்களின் பெயர்கள் தெரியாது.காலையில் நேரம் என்பதால் ஆட்கள் எல்லோரும் இருந்தார்கள் என்றால் எஆள் யாரும் இல்லை.எனது வீடு காம்பவுண்ட் போட்ட வீடு என்றால் இல்லை ரோட்டின் அருகில் வீடு இருந்தாலும் வாசல் உள்ளே தள்ளி உள்ளது.வாசலின் அருகில் நடந்ததனால் வெளியே அருகில் யாருக்கும் தெரியாது என்றால் சரிதான்.எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான்.

2)எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் நான் காவல்நிலையம் சென்றவுடன் போலிசார் தான் புகார் மனு எழுதினார்கள் என்றால் இல்லை எனது மகன் எழுதினான்.அதில் சாட்சி கையொப்பம் எனது மகன் மற்றும் தங்கை செய்தார்கள் என்றால் இல்லை புகார் மனுவில் நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேன்.சம்பவத்திற்கு முன்பாக எனது தங்கை மகள் வேறு சமுதாயத்தை சேர்ந்த ஒரு பையனை காதலித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.அது சம்மந்தமாக எனது தங்கையின் கணவர் மீது எனது தங்கையின் மகள் பிரியதர்ஷினி புகார் கொடுத்திருந்தார் என்றால் கேள்விப்பட்டிருக்கிறேன் ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது.

3)சம்பவத்திற்கு முன்பாக எனது தங்கை , எனது தங்கை கணவர் ஒரே வீட்டில் தான் நல்லபடியாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.எனது தங்கையின் கணவருக்கும் எனது தங்கைக்கும் என்ன சண்டை நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சிலிண்டரை திறந்து விட்டு கொல்ல வந்ததாக சொன்னார்.நான் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 9 மணிக்கு சென்றேன்.நான் காவல்நிலையம் செல்லும் போது போலிசார் எதிரியை கைது செய்து காவல்நிலைவத்தில் வைத்திருந்தார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை.

4)நான் சொன்ன மாதிரி நான் சொன்ன தேதியில் எதிரி என்னை அசிங்கமாக பேசவில்லை என்றால் சரியல்ல.எதிரி என்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டவில்லை என்றாலும் அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் நான் எனது தங்கைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எதிரி அசிங்கமாக பேசியதால் எனக்கு மிகவும் அவமானமாக இருந்ததாக புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.நான் உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.நான் சொன்ன நாள் நேரத்தில் நான்

காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுக்கவில்லை என்றாலும் போலிசார் எழுதிக்கொடுத்ததில் நான் கையெழுத்து செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம் /– திருமதி.ப.சுமதி
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.